# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1990/45 - 2016 ඔක්තෝබර් මස 28 වැනි සිකුරාදා - 2016.10.28

1990/45 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

1. மாவட்டம் - முல்லைத்தீவு
2. பிரதேச செயலாளர் பிரிவு - கரைதுறைப்பற்று
3. காணியின் பெயர் - கள்ளியடியில்காடு
4. காணி உரிமையாளர் பெயர்:
   (1) திருமதி பத்மினி மகேஸ்வரன், திரு. சுப்பையா மகேஸ்வரன்.
   (2) திருமதி மனோகரி சிவகுருநாதன்
5. கிராம அலுவலர் பிரிவு - செம்மலை கிழக்கு Mul/83
6. கிராமம் - செம்மலை
7. காணியின் வரைபட இல. - மூ 162
8. துண்டு இல. - 01 - 02
9. விஸ்தீரணம் - 5.6433 ஹெக்டயார்
10. காணியின் எல்லைகள் -

வடக்கு: கள்ளியடியில்காடு பற்றைக்காடு மற்றும் கடற்கரை ஒதுக்கம்; கிழக்கு: கடற்கரை ஒதுக்கம் மற்றும் கள்ளியடியில்காடு பற்றைக்காடு; தெற்கு: கள்ளியடியில்காடு பற்றைக்காடு மற்றும் அடிப்பாதை; மேற்கு: அடிப்பாதை, கள்ளியடியில்காடு மற்றும் திறந்த தரிசு நிலம்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு தை மாதம் 26 ஆந் திகதி 10.00 மணிக்கு பிரதேச செயலகம், கரைதுறைப்பற்று, முல்லைத்தீவில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு தை மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிகும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சி. குணபாலன்,
பிரதேச செயலாளர்,
கரைதுறைப்பற்று.

பிரதேச செயலகம்,
கரைதுறைப்பற்று,
முல்லைத்தீவு,
2016, ஒற்றோபர் 24.

11-663

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: வ/18/56/2001/III.

2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதிய இல. 1645/12 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கம். 3712 இல் துண்டு இல. 16, துண்டு இல. 31, 32, 33 மற்றும் 34 என கீழ்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தருகிறேன்.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*1.* **துண்டு இல.** *31*

காணியின் பெயர்: எலபொட கும்புர; விபரம்: தரிசு நிலம் (கைவிடப்பட்ட வயல்); உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: யூ. எட்வின் பெரேரா, இல. 706, துடுவேகெதர, ராகம மற்றும் ஜேம்ஸ் சரம், சயிமன் சரம் மற்றும் சிலர், இல. 651, துடுவேகெதர, ராகம; விஸ்தீரணம் : 0.6387 ஹெக்டயார்.

*2.* **துண்டு இல.** *32*

காணியின் பெயர்: எலபொட கும்புர; விபரம்: தரிசு நிலம் (கைவிடப்பட்ட வயல்); உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: என். லீலாரத்ன குரே, இல. 706, துடுவேகெதர, ராகம; விஸ்தீரணம் : 0.1897 ஹெக்டயார்.

*3.* **துண்டு இல.** *33*

காணியின் பெயர்: எலபொட கும்புர; விபரம்: தரிசு நிலம் (கைவிடப்பட்ட வயல்); உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: பீ. சீ. தில்ருக்ஷி, இல. 143/28, விஜிதபுர, வல்பொல, அங்கொடை; விஸ்தீரணம் : 0.2844 ஹெக்டயார்.

*4.* **துண்டு இல.** *34*

காணியின் பெயர்: எலபொட கும்புர; விபரம்: தரிசு நிலம் (கைவிடப்பட்ட வயல்); உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: யூ. எட்வின் பெரேரா, இல. 706, துடுவேகெதர, ராகம மற்றும் ஜேம்ஸ் சரம், சயிமன் சரம் மற்றும் சிலர், இல. 651, துடுவேகெதர, ராகம; விஸ்தீரணம் : 0.7132 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக இல. 31 - 34 வரையான காணிகளுக்கு 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் என் முன் தோன்றும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யூ. ஜீ. பிரேமலால்,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

பிரதேச செயலகம்,
வத்தளை,
2016, ஒற்றோபர் 12.

11 -664